# DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF PRINCIPAL COMMERCIAL COURT,**
**EGMORE, CHENNAI.**

**Dated:23.06.2026**

**Case Number : C. O.S. No:122/2024**

**Deposition :DW1**

**Name : Mr. Shantichand Golecha**

**<u>Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of Indian Evidence Act, on the 23rd day of June, 2026.</u>**

சாட்சிக்கு தமிழ் தெரியாது என்பதாலும் அவர் ஆங்கிலம் தெரியும் என்பதாலும் அவரிடம் ஆங்கிலத்தில் கேள்விகள் கேட்கப்பட்டு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு சாட்சியம் தமிழில் பதிவு செய்யப்படுகிறது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் ஒன்றாம் பிரதிவாதி பங்குதாரர் நிறுவனத்தில் எப்போது பங்குதாரராக சேர்ந்தேன் என்று கேட்டால் 1986 ஆம் வருடம் என்று ஞாபகம். என்னிடம் காட்டப்படும் வாசாஆ.1 மற்றும் 2ல் நானும் ஒரு தரப்பினர் என்று சொன்னால் சரிதான். வாசாஆ.2ல் என்னுடைய கையெழுத்தும் இருக்கிறது. வாசாஆ.2ல் உள்ள சரத்து 4 படி தரை தளத்தில் உள்ள கட்டிடமானது வாடகைக்கு கொடுக்கப்பட்டது. வாதி தாக்கல் செய்த வாடகை கட்டுப்பாட்டு மனுவில் நியாய மாத வாடகை ரூபாய் 30,885/- என்று நிர்ணயம் செய்யப்பட்டதாக என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லி இருக்கிறேன் அது அதிகப்படியான தொகை என்றும் நாங்கள் ஆட்சேபனை செய்கிறோம். அந்த உத்தரவை எதிர்த்து நாங்கள் மேல்முறையீடு செய்தோமா என்று கேட்டால் நாங்கள் சீராய்வு மனு தாக்கல் செய்தோம். வாடகை கட்டுப்பாட்டாளர் நியாய வாடகை நிர்ணயித்ததை எதிர்த்து வாதி ஒரு RCA No.415/1995 மேல்முறையீடு செய்தார் என்று நான் எதிர் வழக்குரையில் நான்காவது பேராவில் சொல்லி இருக்கிறேன். அந்த மேல்முறையீட்டில் மாத வாடகை ரூபாய் 38,753/- என்று நிர்ணயம் செய்யப்பட்டதாக எதிர்வழக்குரையில் சொல்லி இருக்கிறேன். வாதி இயல்பான வாடகை மற்றும் நியாய வாடகை ஆகியவற்றில் உள்ள வேறுபாட்டு தொகை பாக்கி கேட்டு ஒரு வழக்கு தாக்கல் செய்ததாக எதிர்வழக்குரையில் சொல்லி இருக்கிறேன். நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சீராய்வு மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்திருக்கிறேனா என்று என் வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் பாக வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஆகும். சொத்தானது என்னுடை தந்தை மற்றும் அவரது சகோதரரான வாதிக்கு பாத்தியபட்டது. என் தந்தை இறந்த பின்னா் 2,4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது. சமாதான உடன்படிக்கை அந்த பாக வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட போது இவ்வழக்கு நிலுவையில் இருந்ததா என்று

எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றி அந்த சமாதான உடன்படிக்கையில் சொல்லப்படவில்லை. அந்த பாக வழக்கு பற்றியோ அல்லது அதில் ஏற்பட்ட சமாதானம் பற்றியோ ஆகவே தரப்பினர்களுக்குள் சமாதானம் ஏற்பட்டு விட்டது என்றும் இவ்வழக்கு செல்லாது என்றும் இவ்வழக்கில் நாங்கள் குறிப்பாணை எதையும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கானது அந்த பாக வழக்கில் உள்ள சமாதான தீர்ப்பிற்கு சேராது என்றும் ஆகவேதான் அந்த சமாதான தீர்ப்பை பற்றி என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றும் அது சம்பந்தமாக கூடுதல் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சமாதான உடன்படிக்கையில் பொதுவான வார்த்தையில் சொல்லப்படும் சரத்துக்கள் அந்த வழக்கை தான் கட்டுப்படுத்தும் என்றும் அதில் சொல்லப்படாத விஷயங்கள் இவ்வழக்கை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் ஒன்றாம் பிரதிவாதி பற்றி பிவாசாஆ. 2ல் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த பாக வழக்கில் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஒரு தரப்பினர் இல்லை என்று சொன்னால் சரிதான்.

வாதி இவ்வழக்கை ஒன்றாம் பிரதிவாதி பங்குதாரர் நிறுவனத்திற்கு எதிராகவும் அதன் பங்குதாரர்களுக்கு எதிராகவும் மற்றும் இறந்து போன ஒரு பங்குதாரரின் வாரிசுகளுக்கு எதிராகவும் தாக்கல் செய்துள்ளார். பிவாசாஆ-1 மற்றும் 2ல் இவ்வழக்கு பற்றி சொல்லப்படாததாலும் அந்த வழக்கில் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஒரு தரப்பினர் இல்லை என்றும் ஆகவே அந்த வழக்கின் தீர்ப்பு இவ்வழக்கை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விஷயங்களை என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. நான் தவறான சங்கதிகளை சொல்லி நீதிமன்றத்தை தவறாக வழி நடத்துகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லாத விஷயங்களைப் பற்றி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியது இல்லை என்றால் சரியல்ல. நானே என்னுடைய எதிர்வழக்குரையில் வாதிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை ஒப்புக்கொண்டேன் என்றும் ஆகவே பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me in the open court and was read over to the witness and accepted by him/her to the correct.

GANAPATHI SAMY

Digitally signed by GANAPATHI SAMY
Date: 2026.06.23 17:09:09 +0530

Principal Commercial Judge
Date:23.06.2026